தமிழக ஆயர் பேரவை
சுற்று மடல்
புனித வார திருவழிபாட்டுக் கொண்டாட்டங்களுக்கான வழிமுறைகள்

அன்பிற்குரிய பேராயர்கள், ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் மற்றும் பொதுநிலையினரே,

உலகையே உலுக்கி வரும் கரோனா வைரஸ் நமது இந்திய நாட்டிலும் நமது தமிழகத்திலும் ஊடுருவி பெரும் அச்சத்தை உருவாக்கி வருவதை நாம் அறிவோம். இச்சவாலான காலகட்டத்தில் நாம் நம்பிக்கையோடு இறைவனை நோக்கி மன்றாடி வருகிறோம். கரோனா வைரஸை கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கம் எடுக்கும் அனைத்து முயற்சிகளுக்கும் நடவடிக்கைகளுக்கும் நாம் முழு ஒத்துழைப்பு கொடுத்து வருகிறோம். அரசின் பரிந்துரையை ஏற்று மக்கள் திருவழிபாட்டு கொண்டாட்டங்களுக்காக ஆலயங்களுக்கு வர வேண்டாம் என்னும் முடிவினை வேதனையோடு அறிவித்தோம். அதனை நன்மனதோடு ஏற்று தங்கள் இல்லங்கள் அல்லது இருப்பிடங்களில் இருந்து கொண்டு தொடர்ந்து செபித்து வருகிற உங்கள் அனைவருக்கும் நன்றி கூறுகிறேன். பல்வேறு சிரமங்களைத் தாங்கிக் கொண்டு இறைமக்களின் அருள்வாழ்வுக்காக பல்வேறு விதங்களில் உதவி வரும் ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் அனைவருக்கும் நன்றி கூறுகிறேன். தெருவோரங்களில் வசிக்கும் ஏழைகளுக்கு உணவும் மற்ற அத்தியாவசிய பொருட்களையும் வழங்கி வரும் அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் நன்றி கூறி தொடர்ந்து இத்தகைய மனித நேய பணிகளை அரசின் விதிமுறைகளுக்கு உட்பட்டுச் செய்யும்படி அன்புடன் வேண்டுகிறேன்.

24.03.2020 அன்று மாலை மக்களுக்கு ஆற்றிய உரையில் நமது பாரத பிரதமர் அறிவித்த 21 நாட்களுக்கான ஊரடங்கு உத்தரவைத் தொடர்ந்து நமது புனித வார கொண்டாட்டங்களுக்கான தமிழக அளவில் மேற்கொள்ள வேண்டிய ஒருசில வழிமுறைகளை அண்மையில் திருவழிபாட்டு, அருளடையாளங்களின் ஒழுங்குமுறை பேராயம் உரோமையில் இருந்து தந்த வழிகாட்டுதல்களின்படி அளிக்கிறேன்.

1. குருத்து ஞாயிறை மிக எளிமையாக குருத்தோலை பவனியின்றி குருக்கள் மட்டும் அரசின் வழிகாட்டுதல்களுக்கு ஏற்ப கொண்டாடலாம். மந்திரித்த குருத்தோலைகளை பிறிதொரு நாளில் இறைமக்களுக்கு வழங்கலாம். குருக்கள் ஆலயங்களில் திருப்பலி நடைபெறுகிற நேரத்தை மக்களுக்குத் தெரியபடுத்தினால் அவர்கள் தங்கள் இல்லங்களில் இருந்து மாநில திருவழிபாட்டு ஆணைகுழு தயாரித்து வழங்குகிற செபங்களைப் பயன்படுத்தி அந்த நேரத்தில் செபிக்கலாம்.
2. திருத்தைல கிறிஸ்மா எண்ணெய் திருப்பலியை அந்தந்த மறைமாவட்ட ஆயர் பின்னாளில் வேறொரு தேதியை நிர்ணயம் செய்து அன்று கொண்டாடலாம்.
3. பெரிய வியாழன் திருப்பலியை மறைமாவட்ட பேராலயத்திலும் பிற பங்கு ஆலயங்களிலும் குருக்கள் அரசின் வழிகாட்டுதல்களுக்கு ஏற்ப கொண்டாடலாம். ஒரு சில மக்களுக்குக் கூட அனுமதியில்லையெனில், மறைமாவட்ட ஆயர் மறைமாவட்ட பேராலயத்திலும், குருக்கள் அவரவர் பங்கு ஆலயங்களிலும் கொண்டாடலாம். திருப்பலி நேரத்தை இறைமக்களுக்குத் தெரியப்படுத்தி அதே நேரத்தில் அவர்கள் வீடுகளில் இருந்து கொண்டு திருவழிபாட்டு ஆணைக்குழு தயாரித்து வழங்கும் செபங்களைச் செபிக்கலாம்.
4. பெரிய வெள்ளியன்றும் மேற்கண்ட வழிமுறையை பின்பற்றலாம். இறைமக்களுக்கான மன்றாட்டில், கரோனா வைரஸால் பாதிக்கபட்ட மக்களுக்காக, நோயினால் வாடுகின்ற மக்களுக்காக, உலகம் முழுவதும் கரோனா வைரஸால் இறந்த மக்களுக்காக சிறப்பாக செபிக்கலாம். செப்டம்பர் மாதம் 14ஆம் நாள் (திருச்சிலுவை மாட்சி பெருவிழா) அன்று திருச்சிலுவை ஆராதனையை நடத்திக் கொள்ளலாம்.

5. பாஸ்கா திருவிழிப்பு திருப்பலியை மறைமாவட்ட பேராலயத்திலும், பங்கு ஆலயங்களிலும் மேற்கண்ட வழிமுறையைப் பின்பற்றி கொண்டாடலாம்:
   அ. நெருப்பு மந்திரிப்பதை விட்டுவிடவும்
   ஆ. பாஸ்கா திரியைப் பற்ற வைக்கலாம்.
   இ. பவனியை தவிர்த்து விடவும்.
   ஈ. பாஸ்கா புகழுரையும், இறைவார்த்தை வழிபாடும் இடம் பெறும்.
   உ. திருமுழுக்கு வாக்குறுதிகளைப் புதுப்பித்து கொள்ளுதல் மட்டும் வைத்துக் கொள்ளலாம்.
   ஊ. திருவிருந்து வழிபாடு வழக்கம் போல் நடைபெறலாம்.

6. துறவற இல்லங்கள், குருமடங்கள் போன்ற பிற இடங்களில் புனித வார திருவழிபாட்டுக் கொண்டாட்டங்களை அரசின் விதிமுறைகளுக்கு உட்பட்டு நடத்துவது பற்றி அந்தந்த மறைமாவட்ட ஆயர் முடிவு செய்து கொள்ளலாம்.
7. மாநில திருவழிபாட்டு ஆணைகுழு தயாரித்து வழங்குகிற செபங்களை அந்தந்த மறைமாவட்ட திருவழிபாட்டு ஆணைக்குழு மக்களிடம் வழங்கலாம்.
8. நமது மாதா தொலைகாட்சி புனித வார அனைத்து திருவழிபாட்டு கொண்டாட்டங்களையும் நேரலையாக ஒளிபரப்புகிறது. அவற்றைக் காணும்படி மக்களுக்கு அறிவுறுத்தலாம்.
9. மேற்கண்ட வழிமுறைகளின் அடிப்படையில், தேவைபடின், அந்தந்த மறைமாவட்ட ஆயர் தமது இறைமக்களுக்கு சுற்றறிக்கை அனுப்பும்படியும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.
10. கரோனா வைரஸ் கட்டுப்படுத்துவதில் அரசு அவ்வபோது எடுக்கும் நடவடிக்கைகளைப் பொறுத்து தமிழக திருஅவையின் வழிகாட்டுதல்கள் அவ்வபோது வழங்கப்படும்.

ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்பை நம்பிக்கையுடன் கொண்டாடுவோம். பாவத்தையும் சாவையும் வென்ற இயேசு, நம்மை வாட்டி வதைக்கும் கொடிய நோய்களிலிருந்து நம்மைப் பாதுகாத்து விடுதலை அளிப்பாராக!

அனைவருக்கும் இறையாசீர்!

இறைஇயேசுவில்,



(மேதகு அந்தோணி பாப்புசாமி
தலைவர், தமிழக ஆயர் பேரவை)
25.03.2020